Name: ________________________ (      ) Class: P6__

**TL Composition**      **Duration: 50min**

| | | |
|---|---|---|
| Highest score | | |
| Average score | | |
| Parent's Signature | | |

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் *ஒன்றுக்கு மட்டும்* விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் மொத்தம் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

*வினா 1*

*நான் பார்த்த கலைநிகழ்ச்சி*

சென்ற ஜனவரி மாதம் நீ வசிக்கும் வட்டாரத்தில் உள்ள சமூக நிலையத்தில் பொங்கல் கலைநிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. நீ அதைக் காணச் சென்றாய். அந்தக் கலைநிகழ்ச்சியைப் பற்றி ***100 சொற்களுக்குக் குறையாமல்*** ஒரு கட்டுரை எழுது.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- இக்கலைநிகழ்ச்சி எங்கு, எப்போது நடைபெற்றது?
- இக்கலைநிகழ்ச்சியை முன்னிட்டுச் சமூக நிலையம் எவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருந்தது?
- என்னென்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றன?
- கலைநிகழ்ச்சி உன்னைக் கவர்ந்ததா? ஏன்?

P6 PRELIMINARY
TESTPAPER 11

**Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.**

**'அ' பிரிவு**

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

தாய்லாந்து நாட்டில் ஓர் ஏழை குடியானவன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் (Q1)__________ சென்று விறகு வெட்டிக்கொண்டு வருவான். அவற்றைச் (Q2)__________ விற்றுத் தன் குடும்பத்தை நடத்தி வந்தான். ஒரு முறை வெயில் சுட்டெரித்தது. அவனுக்குக் கால்களில் அணிய செருப்பு இல்லாததால் (Q3)__________ வெப்பம் தாங்கமுடியவில்லை. அதனால் அவன், (Q4) "__________! உன்னைத் தினமும் வணங்கும் எனக்குக் காலில் அணிய ஒரு செருப்பு கூட இல்லையே,!" என்று எண்ணி வருந்தினான். அப்போது இரு கால்களும் இல்லாத ஒருவன் ஓர் (Q5)__________ உட்கார்ந்திருந்தான். இதைக் கண்ட குடியானவன், கால்களை (Q6)__________ விட காலில் அணிய செருப்பு இல்லாத தன் நிலை எவ்வளவோ மேல் என்று உணர்ந்தான். அவன் கடவுளுக்கு நன்றி கூறினான்.

Q1.
1. காட்டில்
2. காட்டுக்கு
3. காட்டின்
4. காட்டிலிருந்து

( )

Q2.
1. சந்தையை
2. சந்தையிலிருந்து
3. சந்தைக்கு
4. சந்தையில்

( )

Q3.
1. அவனை
2. அவனிடம்
3. அவனால்
4. அவனோடு

( )

Q4. 1. கடவுளை
2. கடவுள்
3. கடவுளே ( )
4. கடவுளிடம்

Q5. 1. ஊன்றுகோலுடன்
2. ஊன்றுகோலால்
3. ஊன்றுகோலை ( )
4. ஊன்றுகோலில்

Q6. 1. இழந்தவனை
2. இழந்தவனுக்கு
3. இழந்தவனால் ( )
4. இழந்தவனின்

**A2 செய்யுள் / பழமொழி**

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(12 மதிப்பெண்கள்)**

Q7. ______________ பலவான் ஆவான்.

1. குணவான்
2. புத்திமான்
3. அறிவாளன்
4. கற்றான்

( )

Q8. உப்பிட்டவரை ______________________ நினை.

1. மனமளவும்
2. அறிவளவும்
3. பெரிதளவும்
4. உள்ளளவும்

( )

Q9. முதல் கோணல் ____________________ கோணல்.

1. பாதி
2. எல்லாம்
3. முற்றும்
4. இறுதி

( )

Q10. விசும்பின் துளி _______________ அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

1. விழின்
2. வழியின்
3. வீழ்வதில்
4. வீழின்

( )

Q11. வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போல் ________________.

அ. ஒளிரும்
ஆ. எழும்
இ. போகும்  ( )
ஈ. கெடும்

Q12. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
________________ வாழும் உயிர்க்கு.

அ. கண்ணென்ப
ஆ. உயிரென்ப
இ. தேவையென்ப  ( )
ஈ. மூச்சென்ப

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

மாலாவும் கலாவும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள். அதுமட்டுமல்ல அவர்களுடைய அடுக்குமாடி வீடுகளும் அருகருகே இருந்தன. பிள்ளைகள் ஒரே வகுப்பில் பயில்வதால் பெற்றோர்களும் நெருங்கிப் பழகினார்கள். சிறுமிகள் இருவரும் தினமும் மாலை ஐந்து மணிக்குச் சிறுவர் பூங்காவுக்குச் சென்று விளையாடுவது வழக்கம். மாலா மிகவும் அமைதியானவள். ஆனால், கலாவோ மாலாவுக்கு எதிர்மாறானவள். அவளுக்கு முரட்டுக் குணம் அதிகம். அன்று வழக்கம் போல் இருவரும் விளையாடச் சிறுவர் பூங்காவுக்குச் சென்றார்கள்.

அன்று அவர்கள் ஓடியாடி விளையாடினர். அவர்களுடைய தாயார்களும் பூங்காவில் இருந்த ஓர் இருக்கையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக் கொண்டிருந்தாலும் அவர்களுடைய பார்வை பிள்ளைகளின்மீது இருந்தது. பிள்ளைகள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது தற்செயலாகக் கலா மாலாவைப் பிடித்துத் தள்ளினாள். மாலா கீழே விழுந்தாள். அவள் விழுந்த போது அவளுடைய தலை, அருகில் கிடந்த கல்லில் மோதியது. அவளுடைய தலையிலிருந்து இரத்தம் வழிந்தது. அவளுடைய அம்மா பதற்றத்துடன் அங்கு ஓடி வந்தார்.

தன் பிள்ளையின் தலையில் ரத்தத்தைப் பார்த்ததும் கலாவைத் திட்ட ஆரம்பித்தார். "உன் வயது பிள்ளைகளிடம் இப்படியா நடந்து கொள்வது? எப்படிச் சேர்ந்து விளையாடுவது என்பதுகூட இன்னும் உனக்குத் தெரியவில்லையா? ஆள் தான் வளர்ந்து இருக்கிறாயே தவிர, வேறு ஒன்றும் தெரியவில்லை !" என்று திட்டினார். மாலாவின் தாயார் தன் மகளைக் கண்டபடி திட்டுவதைக் கண்டு கலாவின் தாயாருக்குக் கோபம் வந்தது. ஆனால், தன் பிள்ளை தவறு செய்திருந்ததாலும் மாலாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்ததாலும் அவர் ஒன்றும் பேசவில்லை. மாலாவின் தாயார் எரிச்சலுடன் முணங்கிக் கொண்டே தன் பிள்ளையையும் தேற்றியபடி மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. பெற்றோர்கள் எவ்வாறு நண்பர்கள் ஆனார்கள்?

(1) ஒரே அடுக்குமாடி வீட்டில் வசித்ததால்
(2) பிள்ளைகள் ஒரே பள்ளியில் பயிலாததால் ( )
(3) பிள்ளைகள் திடலில் சேர்ந்து விளையாடுவதால்
(4) பிள்ளைகள் ஒரே வகுப்பில் பயில்வதால்

Q14. கலா எப்படிப்பட்டவள்?

(1) எல்லாரிடமும் நெருங்கிப் பழகுபவள் ( )
(2) எல்லாரையும் எதிர்த்துப் பேசுபவள்
(3) எல்லாரையும் பிடித்துத் தள்ளுபவள்
(4) முரட்டுக் குணம் உடையவள்

Q15. பெற்றோர் என்ன செய்தனர்?

(1) இருக்கையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர் ( )
(2) பிள்ளைகளின் செயல்களைக் கவனித்தார்கள்
(3) பேசிக் கொண்டே பிள்ளைகளின்மீது கவனம் செலுத்தினார்கள்.
(4) பிள்ளைகளைக் கவனிக்காமல் பேசிக் கொண்டிருந்தனர்.

Q16. மாலாவின் தாயார் ஏன் கலாவைத் திட்டினார்?

(1) மாலா விழுந்ததால் ( )
(2) மாலாவின் தலையில் இரத்தம் வந்ததால்
(3) மாலா அலறியதால்
(4) மாலா மன்னிப்பு கேட்காததால்

Q17. கோபம் அடைந்த கலாவின் அன்னை ஏன் பேசவில்லை?

(1) கலா தவறு செய்யாததால்
(2) கலா தவறு செய்திருந்ததாலும், மாலா பரிதாபமாக இருந்ததாலும்
(3) பாதிக்கப்பட்டவர்கள் பேசத் தான் செய்வார்கள் என்பதால்
(4) தன் பிள்ளையால் மாலா பாதிக்கப்படாததால்

( )

<u>சொற்பொருள்</u>

**18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)**

Q18. பயில்வதால்

1. செல்வதால்
2. இருப்பதால்
3. கற்பதால்
4. சேர்வதால்

( )

Q19. பதற்றத்துடன்

1. தைரியத்துடன்
2. கலக்கத்துடன்
3. பயத்துடன்
4. தயக்கத்துடன்

( )

Q20. ஆரம்பித்தார்

1. எண்ணினார்
2. முயன்றார்
3. வந்தார்
(4) தொடங்கினார்

( )

<u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :



என்ன பிரச்சனை?
வேலை சம்பந்தமான மனச்சோர்வா?
மன அழுத்தமா?
முதுகு வலியா?
மூட்டுவலியா?
பாரம்பரிய ஆயுர்வேத சிகிச்சை அறிமுகம்!



**கடந்த 25 ஆண்டுகளாக வைத்தியம் வழங்கி வரும் பிரபல வைத்தியர் சா. ராமநாதனைக் காண இன்றே வாருங்கள் ! 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே வரலாம்!**

- முதல் சிகிச்சை - இலவசம்
- தொடர்ந்து வரும் சிகிச்சைகள் - $ 50 கட்டணம்
- மருந்து $40
- மருத்துவப் புத்தகம் முதல் முறை வருவோருக்கு இலவசம் !

<u>திறந்திருக்கும் நேரம்</u>

வார நாட்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை
வார இறுதி நாட்களில் காலை 7 மணி முதல் 10 மணி வரை
பொது விடுமுறை நாட்களில் அடைப்பு



ஆயுர்வேத வைத்தியசாலை பிரைவேட் லிமிடெட்
16 தெக் வாய் அவின்யூ, சிங்கப்பூர் 680019
தொலைபேசி எண் : 67691118, தொலைப்பிரதி : 67691119

*மேல் விவரங்களுக்கு:*
*திருமதி வாணியை அழைக்கலாம்*
*(24 மணி நேரச்சேவை உண்டு)*





Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. சிகிச்சைக்காக வருவோர் முதல் முறை எவற்றை இலவசமாக எதிர்பார்க்கலாம்?

1. வைத்தியமும், மருந்தும்
2. மருந்தும், மருத்துவ புத்தகமும்
3. வைத்தியமும், மருத்துவ புத்தகமும்
4. வைத்தியமும், மருந்தும், மருத்துவ புத்தகமும்

( )

Q22. ஒருவர் வைத்தியத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள எப்போது தொடர்புகொள்ளலாம்?

1. காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை
2. காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை
3. காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை
4. எப்போது வேண்டுமானாலும் தொடர்புகொள்ளலாம்

( )

Q23. வைத்தியர் என்னென்ன பிரச்சனைகளைக் குணப்படுத்துவார்?

1. மனச்சோர்வு, மன அழுத்தம் மற்றும் வயிற்று வலி
2. மனச்சோர்வு, மன அழுத்தம் மற்றும் மூட்டு வலி
3. மனச்சோர்வு, இரத்த அழுத்தம் மற்றும் மூட்டு வலி
4. மனச்சோர்வு, இரத்த அழுத்தம் மற்றும் முதுகு வலி

( )

**Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.**

**'ஆ' பிரிவு**

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q24 நாங்கள் பறவைக்காட்சியைப் பார்த்துவிட்டு வெளியே வந்தோம். அங்கே எனக்குப் பிடித்த சோள __________ விற்கும் கடை ஒன்று இருந்தது. Q24 (    )

Q25 நாங்கள் கடற்கரையில் அமர்ந்திருந்தோம். அப்போது சில நண்டுகள் __________ புகுந்து விளையாடுவதைப் பார்த்தோம். Q25 (    )

Q26. நான் 'குற்றக் கண்காணிப்பு' என்ற நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் கண்டேன். அதில் மூதாட்டியின் கைப்பையைத் திருடன் வழி __________ பிடுங்கிச் செல்வது காண்பிக்கப்பட்டது. Q26 (    )

Q27 அந்தப் பாழடைந்த மண்டபம் இருளில் பயங்கரமாகத் தோன்றியது. அதனுள் நுழைவதற்கு முன்பே எனக்கு __________ வந்தது. Q27 (    )

Q28. என் அத்தையின் திருமணத்தன்று, மணமகன் மங்கல __________ ஒன்றை அவர் கழுத்தில் கட்டினார். அத்தருணத்தில் நாங்கள் அவர்களின் மீது மஞ்சள் அரிசியைத் தூவி வாழ்த்தினோம். Q28 (    )

| | |
|---|---|
| (1) பொரி | (2) கிழி |
| (3) பறித்து | (4) பொறி |
| (5) கிலி | (6) வலையில் |
| (7) நாண் | (8) நாண் |
| (9) வளையில் | (10) மறித்து |

10

202

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

ஆங்கில ஆசிரியர் விடைத்தாளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். சரண்யா என்னும் மாணவியின் இதய (Q29) ______ இரட்டிப்பாகிக் கொண்டிருந்தது. "சரண்யா!" என்று ஆசிரியர் அழைத்ததும் அவளுடைய இதயம் ஒரு கணம் நின்றதைப் போன்ற உணர்வு பெற்றுத் தெளிந்தாள். ஆசிரியர் அவளை (Q30) ______ தொடங்கினார்.

(Q31) ______ சரண்யா மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறாள் என்றார். அவளைப் பின்பற்றி மற்ற மாணவர்களும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

சரண்யா மற்றவர்களைப் பார்த்து எழுதியதை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. குற்ற (Q32) ______ அவளுடைய் உள்ளத்தை வாட்டி வதைத்தது. செய்வது அறியாது நின்றவள் தன்னை (Q33) ______ கொண்டு வகுப்பின் முன் சென்றாள். அவளுடைய கண்களிலிருந்து (Q34) ______ வழிந்தோடியது. தான் செய்த தவற்றைப் பலர் முன்னிலையில் கூறிவிட்டு அமைதியானாள். முதலில் ஆசிரியருக்குக் கோபம் வந்தது. (Q35) ______ அவர் தான் செய்யாத தவற்றை மறைக்காத சரண்யாவைப் புகழ்ந்தார். இவ்வாறு மீண்டும் செய்யாமல் இருக்கும்படி அறிவுரை கூறினார்.

Q29 (   )
Q30 (   )
Q31 (   )
Q32 (   )
Q33 (   )
Q34 (   )
Q35 (   )

| | | |
|---|---|---|
| 1) இம்முறை | 2) கண்ணீர் | 3) பண்படுத்தி |
| 4) பாராட்ட | 5) துடிப்பு | 6) எண்ணம் |
| 7) சிரிப்பு | 8) திட்ட | 9) அதனால் |
| 10) உணர்வு | 11) இருப்பினும் | 12) அடைப்பு |

D8 சுயவிடைக் கருத்தறிதல்



பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

குமாரசாமி ஒரு வணிகர். அவர் பல நாடுகளுக்குச் சென்று பலவகையான பொருட்களை வாங்கி வந்து விற்றுப் பெரும் பணக்காரர் ஆனார். ஒரு சமயம் அவர் இந்தியாவிலிருந்து பொருட்களை வாங்கிக்கொண்டு கப்பலில் நாடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது திடீரென்று புயல் காற்று வீசி, கடும்மழை பெய்தது. அவரது கப்பல் கடலில் தத்தளித்தது. கப்பல் மூழ்காமல் இருக்க மாலுமிகள் கப்பலிலிருந்த பொருட்களை எல்லாம் கடலுக்குள் வீசினர்.

ஒருவழியாக மழை நின்று, புயல் காற்றும் ஓய்ந்தது. ஆனால் கப்பலுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டிருந்ததால் அதில் பயணம் செய்வது ஆபத்து என்று உணர்ந்தார் கப்பல் தலைவர். அவர், சற்றுத் தொலைவில் தென்பட்டத் தீவை நோக்கிக் கப்பலைச் செலுத்தினார். அங்கிருந்து தீமூட்டி, ஏதாவது கப்பலின் கவனத்தை ஈர்த்து அவர்களது உதவியுடன் நாடு திரும்பலாம் என்று அவர் எண்ணினார்.

கப்பல் தீவை அடைந்ததும், மாலுமிகளில் சிலர் உணவு தேடி தீவுக்குள் சென்றனர். மற்றவர்கள் அங்கிருந்த மரக்கிளைகள், இலைகளைக் கொண்டு தாங்கள் தங்கக் கரையோரமாக ஓர் இடத்தை அமைத்தனர். ஆனால், குமாரசாமி மட்டும் தனக்கு ஏற்பட்ட நட்டத்தைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தார்.

வேட்டையாடித் திரும்பிய மாலுமிகள் தீ மூட்டி, தாங்கள் வேட்டையாடி வந்த முயல், மான் ஆகியவற்றை வாட்டினர். பின் அவ்வுணவை அனைவருக்கும் பகிர்ந்தளித்து, உண்டு மகிழ்ந்தனர். அவர்கள் தீயைச் சுற்றி அமர்ந்து பாட்டுப் பாடி, கதை சொல்லிப் பொழுதைக் கழித்தனர். ஆனால் குமாரசாமி மட்டும் அவர்களோடு சேராமல் தனியாகச் சோகமே வடிவாக இருந்தார். இதைக் கவனித்த கப்பல் தலைவர், அவரருகில் சென்று, "ஐயா, நீங்கள் ஏன் இப்படித் தனியாக இருக்கிறீர்கள்?" என்று வினவினார். அதற்குக் குமாரசாமி, "நான் வாங்கிவந்த பொருட்கள் எல்லாம் நாசமாகிவிட்டன. அந்த நட்டத்தை நான் எவ்வாறு ஈடுசெய்யப் போகிறேன் என்று தெரியவில்லை," என்று கூறினார். இதைக் கேட்ட கப்பல் தலைவர் சிரித்தார். குமாரசாமி ஒன்றும் புரியாமல் விழித்தார். அப்போது கப்பல் தலைவர், "ஐயா, எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து உயிர்த் தப்பி இருக்கிறோம். அதை எண்ணி மகிழாமல், உங்கள் பொருட்கள் வீணாகிவிட்டதை எண்ணி வருந்துகிறீர்களே? உங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யலாம், ஆனால் உயிர் போயிருந்தால் .. ..?," என்று கூறிச் சென்றார்.

36. குமாரசாமி எவ்வாறு பெரும் பணக்காரர் ஆனார்? (3 ம.)

37. கப்பலில் இருந்த பொருட்கள் ஏன் வீசப்பட்டன? (2 ம.)

38. கப்பல் தலைவர் உடனே நாடு திரும்பாதது ஏன்? (3 ம.)

39. கப்பலில் இருந்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவி, ஒற்றுமையுடன் செயல்பட்டனர் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்? (5 ம.)

40. கப்பல் தலைவர் சிரித்ததன் காரணம் என்ன? ( 4 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

41. [illegible]களுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யலாம், ஆனால் உயிர் போயிருந்தால் .....?" என[illegible] [illegible]றியதற்கு உன் விளக்கம் என்ன? ( 3 ம.)

______________________________________________

______________________________________________

______________________________________________

# PRELIMINARY EXAMINATION
## MOTHER TONGUE -TAMIL
## PRIMARY 6
## PAPER 2

**Answerkey**

| | |
|---|---|
| **வேற்றுமை** | |
| 1 | 2 |
| 2 | 4 |
| 3 | 3 |
| 4 | 3 |
| 5 | 1 |
| 6 | 1 |
| **செய்யுள்/ பழமொழி** | |
| 7 | 2 |
| 8 | 4 |
| 9 | 3 |
| 10 | 4 |
| 11 | 4 |
| 12 | 1 |
| **தெரிவுவிடைக் கருத்தறிதல் (MCQ Comprehension)** | |
| 13 | 4 |
| 14 | 4 |
| 15 | 3 |
| 16 | 2 |
| 17 | 2 |
| **சொற்பொருள் (Vocabulary)** | |
| 18 | 3 |
| 19 | 2 |
| 20 | 4 |
| **கருத்துவிளக்கப்படம் (Graphic Stimulus)** | |
| 21 | 3 |
| 22 | 4 |
| 23 | 2 |
| **ஒலிவேறுபாடு** | |
| 24 | 1 |
| 25 | 9 |
| 26 | 3 |
| 27 | 5 |
| 28 | 7 |
| **முன்னுணர்வுக் கருத்தறிதல் (Cloze Passage)** | |
| 29 | 5 |
| 30 | 4 |
| 31 | 1 |

| | |
|---|---|
| 32 | 10 |
| 33 | 3 |
| 34 | 2 |
| 35 | 11 |

Q36 குமாரசாமி பல நாடுகளுக்குச் சென்று (1) பலவகையான பொருட்களை வாங்கி வந்து விற்றுப் (1) பெரும் பணக்காரர் ஆனார். (மொ:1)

Q37 புயலில் சிக்கியக் கப்பல் கடலில் மூழ்காமல் இருக்க (1) கப்பலிலிருந்த பொருட்கள் வீசப்பட்டன. (மொ:1)

Q38 புயலினால் பெருஞ்சேதம் அடைந்திருந்த கப்பலில் (1) பயணம் செய்வது ஆபத்து என்று உணர்ந்ததால் (1) கப்பல் தலைவர் உடனே நாடு திரும்பவில்லை. (மொ:1)

Q39 தீவை அடைந்ததும், மாலுமிகளில் சிலர் உணவு தேடி தீவுக்குள் சென்று, (1) முயல், மான் போன்றவற்றை வேட்டையாடி வந்து, (1) தீயில் வாட்டி அனைவருக்கும் பகிர்ந்தளித்தனர். (1) மற்றவர்கள் அங்கிருந்த மரக்கிளைகள், இலைகளைக் கொண்டு தாங்கள் தங்கக் கரையோரமாக ஓர் இடத்தை அமைத்தனர். (1) இச்செயல்கள் மூலம் கப்பலில் இருந்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவி, ஒற்றுமையுடன் செயல்பட்டனர் என்பதை நாம் அறியலாம். (மொ:1)

Q40 குமாரசாமி பெரிய ஆபத்திலிருந்து உயிர்த் தப்பியதை எண்ணி மகிழாமல், தனது பொருட்கள் வீணாகிவிட்டதையும், (1) அதனால் ஏற்பட்ட நட்டத்தை எப்படி ஈடு செய்வது (1) என்பதைப் பற்றியும் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததை அறிந்து (1) கப்பல் தலைவர் சிரித்தார். (மொ :1)

Q41 பொருள் வீணாகிவிட்டால் அதைச் சம்பாதிக்கலாம்(1) ஆனால் உயிர் போனால் அதை மீண்டும் பெற முடியாது (1) அவர் உயிரின் முக்கியத்துவத்தை உணர்ந்தார் (1) என்பதைக் காட்டுகிறது. (மொ: 1)